


மனித வாசனை இருக்கும் இடங்களிலெல்லாம் யாராவது ஒரு நாயர், டீக்கடை போட்டுவிடுவார் என்று ஒரு காலத்தில் ஜோக்கடிப்பார்கள். இப்போது டீக்கடை இல்லாத இடங்களில் கூட பெப்சியும் கோககோலாவும் கிடைக்கின்றன.

மார்க்கெட்டிங் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சந்தைப்படுத்துதல் என்று தமிழிலும் படுத்தலாம். சாத்தியமான இடங்களில் எல்லாம் காற்றைப் போல் நிறைந்துவிடுவது.

விளையாட்டாகச் சொல்லிவிடலாம். இது எத்தனை கஷ்டம் தெரியுமா? எத்தனை வருட உழைப்பு தேவைப்பட்டிருக்கும் தெரியுமா? எத்தனை கோடிப் பணத்தைக் கொட்டிக்கொண்டே இருக்கவேண்டும் தெரியுமா? நமக்குத் தெரிந்த நம் ஊர் மட்டுமில்லை. உலகில் எந்தெந்த நாடுகளெல்லாம் உள்ளே வர அனுமதி கொடுக்கிறதோ, அத்தனை நாடுகளிலும் இந்த கம்பெனிகள் இப்படித்தான் தம் சரக்கைச் சந்தைப்படுத்துகின்றன. கற்பனை செய்யமுடியாத கோடிகளில் செலவழித்து, அதைவிடவும் அதிகமாக லாபம் எடுக்கின்றன.

பெப்சியும் கோக்கும் மட்டுமல்ல. இன்னும் எத்தனை எத்தனையோ மாபெரும் கார்ப்பரேட்டுகள் இப்படித்தான் உலகம் முழுவதும் கிளை விரிக்கின்றன. ஒவ்வொரு தேசத்தின் அரசியல் சூழ்நிலையைப் பார்த்து, அதற்கேற்ப தங்கள் வியூகங்களை வகுக்கின்றன. ஆடுகிற மாட்டை ஆடியும், பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்கின்றன. திறந்த பொருளாதாரம். ஆ, அது எத்தனை சௌகரியம்! உயிரோடு இருக்கிற ஒரு சில கம்யூனிச தேசங்கள் தவிர இவர்கள் தம் ராட்சஸக் கிளைகளை விரிப்பதற்கு உலகில் வேறு எங்கும் பெரிய தடையேதுமில்லை.

கிட்டத்தட்ட இதே மாதிரிதான். என்ன, கொஞ்சம் ரகசியமாக, இதே வழியைத்தான் அல் காயிதா பின்பற்றுகிறது. சாத்தியமுள்ள இடங்களிலெல்லாம் கடையை விரி. நேரடிக் கடைக்கு வாய்ப்பில்லை என்றால் அடுத்தவன் கடையை 99 வருஷ லீஸுக்கு எடு. அதுவும் முடியாவிட்டால் அடுத்தவன் கடையில் உன் பொருளையும் விற்பனைக்கு வை. அதற்கும் வழியில்லையா? அடுத்தவன் கடையையே ரகசியமாக நீ விலைக்கு வாங்கிவிடு.

இதில் மிகையே கிடையாது. ஒரு சதவீதம் கூடக் கிடையாது. அமெரிக்கா, கனடா, ஆப்ரிக்கா, ஐரோப்பா, மத்திய ஆசியா, கிழக்கு ஆசியா, ரஷ்யா, முன்னாள் சோவியத் யூனியன் மூட்டையிலிருந்து உருண்டு போன அத்தனை உருளைக்கிழங்கு தேசங்கள், ஆஸ்திரேலியா... இருங்கள், கொஞ்சம் மூச்சு வாங்கிக்கொள்ளலாம். லத்தீன் அமெரிக்கா என்று சொல்லப்படும் தென் அமெரிக்காவில் மட்டும் ஓரிரு இடங்களில் - மற்றபடி இன்று கடவுளுக்கு அடுத்தபடி நீக்கமற நிறைந்திருப்பது அல் காயிதாதான்.

ஒசாமா பின்லேடன் என்கிற ஒரு தனி மனிதரின் கனவுக் குழந்தை அது. தலைக்கு மேலே இரண்டு கொம்புகளை நீட்டிக்கொண்டு ஓனிடா சாத்தான் போல நமக்குத் தெரிந்தாலும், இந்தக்

கணம் ஒசாமா ஒரு வார்த்தை சொன்னால் உடனே ஆயுதம் ஏந்துவதற்கு உலகம் முழுவதிலும் குறைந்தது ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் தயாராக இருக்கிறார்கள் என்று அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ., ஊரெல்லாம் சுற்றி கருத்துக் கணிப்பு நடத்திக் கவலைப்பட்டிருக்கிறது. ஆயுதம் ஏந்த மட்டும்தான் இத்தனை பேர். ஆதரவு மட்டும் தெரிவித்தால் போதுமென்றால், கண்ணை மூடிக்கொண்டு எழுபது லட்சம் பேர் கையைத் தூக்கிவிடுவார்கள்.

சொல்லித்தான் ஆகவேண்டும். இது ஒசாமாவின் இருபத்தைந்து வருடக் கடும் உழைப்பின் விளைவு. தமது சித்தாந்தத்தைப் பரவலாக்க அவர் தேர்ந்தெடுத்த மார்க்கெட்டிங் உத்தி கொடுத்த வெற்றி.

உலகில் அல் காயிதா தவிர பிற அத்தனை தீவிரவாத இயக்கங்களுக்குமே அவர்கள் வாழும் தேசத்து அரசுடன் மட்டும்தான் பிரச்னை. இலங்கைத் தீவில் தமிழர்களுக்குத் தனி நாடு வேண்டும் என்பது தவிர எல்.டி.டி.ஈ. வேறெதையும் கேட்பதில்லை. நேபாளத்தில் இத்தனை கலாட்டாக்கள் நடந்ததே, பிரபாகரன் ஏன் ஒரு சிறு அறிக்கை கூட வெளியிடவில்லை என்று யாராவது கேட்டார்களா? அட, இலங்கையில் இத்தனை வருஷங்களாகப் போராடிக்கொண்டிருக்கிறார்களே, இந்த ஹமாஸ் அதற்காக ஒரு துரும்பையாவாது தூக்கிப் போட்டிருக்குமா என்று உங்களுக்கு எப்போதாவது தோன்றியிருக்குமா? ஈராக்கில் தினசரி ரகளை. ஒரு ஹிஸ்புல் முஜாகிதினோ, குர்திஸ்தான் ஒர்க்கர்ஸ் பார்ட்டியோ, ரெட் ப்ரிகேடோ ஒரு வார்த்தை ஏனென்று கேட்கவில்லையே? அட, நேபாளத்தில்தான் மனிஷா கொய்ராலாவின் தாத்தா பிரதமராகிவிட்டாரே, இனிமேல் அந்த மாவோயிஸ்டு போராளிகளுக்கு அங்கே என்ன வேலை? பஸ் பிடித்து துருக்கிக்கோ தஜிகிஸ்தானுக்கோ போய் சண்டை போடவேண்டியதுதானே?

செய்யமாட்டார்கள் அல்லவா? இங்கேதான் மாறுபடுகிறது அல் காயிதா. மற்ற அனைத்துத் தீவிரவாத இயக்கங்களும் தம் சொந்த தேசத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிரான அதிருப்தியைத்தான் தமது நடவடிக்கைகளின் மூலம் தெரியப்படுத்துகிறார்கள். அல் காயிதா மட்டும்தான் எங்கெல்லாம் முஸ்லிம்கள் கஷ்டப்படுகிறார்களோ, அங்கெல்லாம் வந்து கைகொடுப்பேன் என்று சொன்ன ஒரே இயக்கம். ஒரு குறிப்பிட்ட தேசம் அதன் இலக்கல்ல. மாறாக, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினருக்கும் தன்னை ஒரு பாதுகாவலனாகத் தானே நியமித்துக்கொண்ட அமைப்பு அது.

அல் காயிதாவின் இந்த இயல்பு உருவாக்கப்பட்ட விஷயமல்ல. மாறாக, ஒசாமா பின்லேடனின் அடிப்படை இயல்பே இதுதான்.

இல்லாவிட்டால் மிகப்பெரிய கட்டுமானக் குடும்பத்தின் வாரிசாக, பல கோடிக்கணக்கான சொத்துகளைச் சாப்பிட்டுக்கொண்டு, சௌக்கியமாக, வேண்டியமட்டும் கல்யாணம் பண்ணிக்கொண்டு, வம்ச விருத்தி செய்து வாழ்ந்து ரிடையர் ஆகியிருக்கவேண்டிய ஒசாமா, நாட்டுத்துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு காட்டுக்குப் போயிருக்கமாட்டார்.

ஒசாமாவின் தந்தை முஹம்மது பின் லேடன், சவூதி அரேபியாவில் மிகப்பெரிய கட்டுமான நிறுவனம் ஒன்றை நடத்திவந்தார். லேடன் க்ரூப் என்பது இன்றும் அங்கே சக்கைப்போடு போட்டுக்கொண்டிருக்கும் ஒரு நிறுவனம். நம் ஊரில் எல் அண்ட் டி இருக்கிறதல்லவா? அந்த மாதிரி. இஸ்லாமியர்களின் மாபெரும் புனிதத் தலங்களான மெக்கா, மெதீனா நகரங்களில் அரசுக்கு என்ன கட்டுமான வேலை இருந்தாலும் 'கூப்பிடு முஹம்மது பின்லேடனை'தான்! ஜெருசலேத்தில் உள்ள (பிரச்னைக்குரிய) அல் அக்ஸா பள்ளிவாசலைச் செப்பனிடவேண்டும் என்று முடிவு செய்தபோது, இரண்டாவது அபிப்பிராயமே இல்லாமல் இதே லேடன் க்ரூப்பைத்தான் கூப்பிட்டார்கள். மத்தியக் கிழக்கு நாடுகள் முழுவதிலும் இந்த நிறுவனத்துக்கு அப்படியொரு செல்வாக்கு.

முஹம்மது பின்லேடன், ஜெத்தா துறைமுகத்தில் சரக்கு இறக்கும் கூலித்தொழிலாளியாகத்தான் தம்

வாழ்க்கையைத் தொடங்கினார். எப்படி இப்படியொரு உயரத்தைத் தொட்டார் என்பது தனியே எழுதவேண்டிய ஒரு வெற்றிக்கதை. தீவிரமான பக்தி. தொழிலில் நேர்மை. நிறைய தான, தருமங்கள். அதே சமயம் தமது தனிப்பட்ட சந்தோஷங்களிலும் அவர் சமரசமில்லாதவர். இஸ்லாம் அனுமதித்தபடி நான்கு மனைவிகள். அது தவிர, தனது சொத்து அனுமதித்ததற்கேற்ப ஏழெட்டு சிறிய வீடுகள் அவருக்கு இருந்தன.

முஹம்மது பின்லேடனின் அத்தனை மனைவியருக்குமாகச் சேர்த்து மொத்தம் ஐம்பத்திரண்டு குழந்தைகள். இதில் ஒசாமா பதினேழாவது குழந்தை. ஒசாமாவின் தாய் ஹமீதா, சிரியாவிலிருந்து வந்த பெண்மணி. கொஞ்சம் படித்தவர் என்பது பிராந்தியத்தில் அடிக்கடி வியப்புடன் பேசப்பட்ட விஷயம். மகனைத் தீவிர பக்திமானாக, ஒரு நேர்மையான முஸ்லிமாக அவர் வளர்க்கத் தொடங்கினார்.

சுமாராகப் படித்தார் ஒசாமா. ரொம்ப அமைதியான பையன் என்று வகுப்புகளில் அவருக்கு நல்ல பெயர் உண்டு. மெதீனாவில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு, ஹிஜாஸில் மேல்படிப்பை முடித்தார். படிப்பு முடியும்போதே தமது தாய்வழி உறவுக்காரப் பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டார். திருமணம் நடந்தது தெரியுமே தவிர தேனிலவுக்குப் போனாரா என்று தெரியாது. ஆனால், ஒன்று நிச்சயம். கல்யாணம் ஆன சில தினங்களுக்குள்ளாகவே சவூதி மன்னர் அப்துல் அஜிஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து நிர்வாகவியல் படிக்கத் தொடங்கிவிட்டார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ஒசாமாவின் மதப்பற்று அதிகரிக்க ஆரம்பித்தது. அந்நாளின் தலைசிறந்த இஸ்லாமியச் சிந்தனையாளர்கள் என்று சொல்லப்படும் அப்துல்லா அஸம், சையத் கதப், அவரது சகோதரரான அப்துல்லா கதப் போன்றவர்களின் தொடர்பும் அன்பும் ஒசாமாவுக்கு அப்போது கிடைத்தது. அவர்களிடம் இஸ்லாம் தொடர்பான பல சந்தேகங்களுக்கு விடை பெற்ற ஒசாமாவுக்கு தம் மதத்துக்குத் தம்மாலான எதையாவது தொடர்ந்து செய்துகொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்படத் தொடங்கியது.

இது ஒசாமாவே நினைத்துப் பார்க்காத மாற்றம். அவருடைய யோசனையெல்லாம் படிப்பை முடித்தோமா, அப்பாவின் கம்பெனியில் ஏதாவது ஓர் உத்தியோகத்தில் சேர்ந்தோமா, தொழில் கற்றுக்கொண்டு முன்னுக்கு வந்தோமா என்று இருப்பதில்தான். ஆனால் மேற்சொன்ன அறிஞர்களின் சகவாசம் அவரை நிர்வாகவியலிலிருந்து ரொம்ப தூரத்துக்கு இழுத்துக்கொண்டு போய்விட்டது.

பேப்பர் படித்து உலக விஷயம் தெரிந்துகொண்டவர் அல்லர் அவர். மாறாக, உலகெங்கும் முஸ்லிம் சமூகத்தவர்கள் எங்கெங்கே என்னென்ன கஷ்டப்படுகிறார்கள், அதற்கு என்ன காரணம், யார் காரணம், எதனால் கஷ்டம் தீராமல் இருக்கிறது என்று அக்குவேறு ஆணிவேறாகத் தம் ஆசிரியர்களிடம் விவாதித்து, அலசித் தெளிவு கொண்டவர்.

பாலஸ்தீன் முஸ்லிம்களுக்கு யூதர்களால் பிரச்னை. ஈராக் முஸ்லிம்களுக்கு சதாமால் பிரச்னை. ரஷ்ய உருளைக்கிழங்கு தேசங்களின் முஸ்லிம்களுக்கு கிறிஸ்துவர்களாலும் கம்யூனிஸ்டுகளாலும் பிரச்னை. ஐரோப்பிய முஸ்லிம்களுக்கு அத்தனை பேராலும் பிரச்னை. பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு அரசாங்கமே பிரச்னை. ஆப்கனிஸ்தான் முஸ்லிம்களுக்கு –

அப்போதுதான் ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் ஒசாமாவின் தந்தை இறந்துபோனார். தாற்காலிகமாகத் தமது சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டு சிந்தை இரங்குவதை நிறுத்திவைத்துவிட்டு, அவசர அவசரமாக அப்பாவின் கம்பெனியில் போய்ச் சேர்ந்தார் ஒசாமா. போதாக்குறைக்கு சொத்துத் தகராறு வேறு. ஒன்றிரண்டு உடன்பிறப்புகள் இருந்தாலே சமாளிப்பது கஷ்டம். முஹம்மது பின்லேடன் அரை செஞ்சுரிக்கு மேலேயும் இரண்டு ரன் எடுத்தவர். கேட்கவேண்டுமா?

சவூதி அரேபிய மன்னரே ஒரு கமிட்டி அமைத்து லேடன் குடும்பத்துச் சொத்துகள் பிரிந்துவிடாமல் பராமரிக்கப்பட ஏற்பாடுகள் செய்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அப்படியும் முடியவில்லை. ஒசாமாவின் சகோதரர்களுள் ஒருவரான அலி என்பவர் தன் பங்குச் சொத்தைப் பிரித்துத் தரத்தான் வேண்டும் என்று ஒன்றரைக் காலில் நின்று சாதித்தார். வேறு வழியில்லாமல் அவரது பங்கை மட்டும் பிரித்துக் கொடுத்து அனுப்பிவைத்தார்கள்.

இந்தச் சம்பவம் நடந்தபோது அலிக்கு வயது 21. இப்போது இவர் லெபனானில் வசிக்கிறார். தொடக்க காலத்தில் ஒசாமா குறித்த தகவல்களை இவரிடமிருந்தே சி.ஐ.ஏ. பெற்றுவந்தது.

இது ஒரு பக்கம் இருக்க, பிசினஸில் இறங்கிவிட்ட ஒசாமாவுக்குத் தமது மதப் பணிகளை அதன்பொருட்டு நிறுத்திவிடவோ, முற்றிலும் ஒரு பிசினஸ்மேன் ஆகி கோட் சூட் மாட்டிக்கொண்டு விமானத்தில் வலம் வரவோ துளியும் விருப்பமில்லை. ஓய்வு நேரம் கிடைக்கும்போதெல்லாம், எங்கெங்கே இஸ்லாமியர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று கவனிக்கவும், அங்கேயெல்லாம் தன்னால் என்ன செய்யமுடியும் என்று சிந்திக்கவும் ஆரம்பித்தார்.

உதாரணமாக, அப்போது ஏமன் நாட்டின் தென்பகுதியில் முஸ்லிம்களுக்கு கம்யூனிஸ்டுகளால் பெரும் பிரச்னை இருந்தது. அடிக்கடி மோதிக்கொண்டார்கள். வெறும் வாய்ச்சண்டை போலத் தொடங்கிய இது, நாளடைவில் மிகப் பெரிய யுத்தமாகவே ஆகிவிடும் அளவுக்குப் பரிணாம வளர்ச்சி கண்டது. ஒசாமாவுக்கு இது மிகவும் கவலை அளித்தது. தவிரவும் அங்கே கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெரும்பாலான முஸ்லிம்கள், சவூதியிலிருந்து பிழைப்புத்தேடி ஏமனுக்குப் போனவர்கள். போன இடத்தில் கம்யூனிஸ்டுகளால் கொத்து பரோட்டா போடப்பட்டவர்கள்.

ஒசாமா, இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவு செய்து, சவூதியிலிருந்து ஏமனுக்குப் போன தமது நண்பர்கள் மூலம் அவ்வப்போது நிறையப் பணம் கொடுத்து அனுப்பினார். வேறு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் என்று அக்கறையுடன் தகவல் அனுப்பினார். கஷ்டப்படும் முஸ்லிம்களுக்கு உதவுவதைக் காட்டிலும் பெரிய இறைப்பணி இருக்கமுடியாது என்பது அவரது கருத்து.

ஏமன் போராளிகள் என்றில்லை. எங்கே முஸ்லிம்கள் கஷ்டப்படுவதாகக் கேள்விப்பட்டாலும் அவர் செய்யக்கூடியவராகவே இருந்தார். இது அவரது பிறவிக்குணம். இதே குணம்தான் அவரை முன்பின் தெரியாத ஆப்கனிஸ்தான் போராளிகளுக்கு உதவி செய்வதற்காக ரகசிய விமானம் ஏற்றி, பாகிஸ்தானுக்கு 1979-ல் அழைத்து வந்து சேர்த்தது.